அளித்து பல உயிர்களை காப்பாற்ற இயலும்.

நாமும், நமது குடும்பமும் வளர்ந்து, கல்வி பயின்று, சிறந்து வாழ்ந்திட இந்த சமுதாயம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொண்டாற்றி வருகிறது. இச் சமுதாயத்தில் பல உயிர்களை காக்கின்ற புனிதமான பணியாக இரத்த தானம் விளங்குகிறது. இயற்கை நியதியின்படி மீண்டும் மீண்டும் உடலில் தானாக உற்பத்தியாகி குறிப்பிட்ட காலத்தில் வீணாகி கொண்டுள்ள இரத்தத்தை பலர் உயிர்வாழ அளிப்பதில் அடையும் மகிழ்ச்சி இறைவனுக்கு செய்யப்படும் தொண்டைவிட உயர்ந்தது, மேன்மையானது.

**யார் இரத்த தானம் அளிக்கக் கூடாது**

- 18 வயதிற்குள் 60 வயதிற்கு மேல்
- ஹீமோகுளோபின் அளவு 12.5 gm% க்கு குறைவாக உள்ளவர்கள்
- இரத்த அழுத்தம் 100/ 150 mm Hg க்கு குறைவாகவோ, 180/ 100 mm Hg க்கு அதிகமாக உள்ளவர்கள்
- இருதய நோய், சிறுநீரக நோய், சர்க்கரை நோய், தைராய்டு மற்றும் வலிப்பு நோய் உள்ளவர்கள்
- ஒரு வருடத்திற்குள் இரத்த தானம் பெற்றவர்கள்
- கடந்த 3 மாத காலத்தில் இரத்த தானம் அளித்தவர்கள்
- கருவுற்ற காலத்திலும், தாய்ப்பால் ஊட்டும் காலத்திலும், மாதவிடாய் காலத்திலும்
- கருச்சிதைவுக்கு பின்னர் 6 மாத காலத்திற்குள்
- மது அருந்திய 24 மணி நேரத்திற்குள்
- பெரிய அறுவை சிகிச்சை செய்தவர்கள் ஒரு வருட காலத்திற்குள்
- சிறிய அறுவை சிகிச்சை செய்தவர்கள் 6 மாத காலத்திற்குள்
- மஞ்சள் காமாலை, பால்வினை நோய், வெறிநாய்க்கடி சிகிச்சைக்கு பின்னர் ஓராண்டு வரை
- நிமோனியா, மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள்
- காசநோய் சிகிச்சை பெற்றவர்கள் 5 ஆண்டுகள் வரை
- இரத்த தானம் செய்யும் நாளில் இருமல், ஜலதோஷம், தொண்டைவலி உள்ளவர்கள்

**இரத்ததானம் அளிக்கும் இரத்தத்தின் அளவும், காலமும்**

நமது உடலிலிருந்து 200 முதல் 300 ml வரை இரத்தம் தானமாக அளிக்கப்படுகிறது. இரத்தத்தை பாதுகாக்க தேவைப்படும் திரவியங்கள் சேர்த்து 350 முதல் 450 ml வரை என்று ஒரு யூனிட் இரத்தம் கணக்கிடப்படுகிறது.

இரத்த தானம் அளிப்பதற்கு சுமார் 10 முதல் 12 நிமிடங்கள் மட்டுமே தேவைப்படும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆண்களும், நான்கு மாதங்களுக்கு ஒரு முறை பெண்களும் இரத்ததானம் அளிக்கலாம்.

**யார் இரத்த தானம் அளிக்கலாம்**

- மனித நேயம் மிக்க ஆரோக்கியமான மனிதர்கள்
- 18 முதல் 60 வயது உள்ளவர்கள்
- இரத்தத்தில் ஹிமோகுளோபின் அளவு 12.5 gm% உள்ளவர்கள்
- உடல் எடை சுமார் 45 கிலோ அதற்கு மேலும் உள்ளவர்கள்
- இரத்த அழுத்தம் 100/50 mm Hg முதல் 180/100 mm Hg உள்ளவர்கள்

பங்கு கொள்வோம் – இரத்த தானத்தில்.
பதிவு செய்வோம் – வரலாற்றில்.

தகவல் திரட்டு : வலைதளம்

நன்றி, வணக்கங்களுடன்

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்.**

## Willingness Form
## Mass Blood Donation
## 02.10.2016

1. Name :
2. Date of Birth :
3. Age :
4. Sex : Male / Female
5. Blood Group :
6. Communication No. :
   Office :
   Personal :
   E-mail :
7. Address :
   District :

Signature

For Contact :

சமுதாயப் பணியில் சங்கம்

50

**பொன் விழா ஆண்டு**

(1967-2016)

**மாபெரும் இரத்ததான முகாம்**

நாள் : 02.10.2016

நேரம் : காலை 8.30 மணி முதல்
மாலை 4.00 மணி வரை

இடம் : அனைத்து மாவட்ட - தலைமை மருத்துவமனை / அரசு பொது மருத்துவமனை. மற்றும் மின்வாரிய தலைமை அலுவலகம், சென்னை

பொன்விழா ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் முன்னின்று நடத்தும் இரத்த தான முகாமில் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*கரம் சேர்ப்போம்!*
*உயிர் காப்போம்!!*

Scanned by CamScanner

# இரத்த தானம்

### இரத்தம்

இரத்தம் ஒரு சிறப்பு நிற திரவம், மனித உடலில் சுமார் 5 முதல் 6 லிட்டர் இரத்தம் உள்ளது. இது சுழற்சி மூலம் இதயத்திலிருந்து கிளம்பி முழுமையாக உடலில் சென்று இதயத்திற்கு திரும்ப சுமார் 20 முதல் 30 விநாடிகள் ஆகும். ஆரோக்கியமான மனிதனின் உடல் எடையில் 7% இரத்தம் உள்ளது.

உடலுக்கு தேவையான பல்வேறு அடிப்படை செயல்பாடுகளை செய்து உடலிலுள்ள கழிவுப் பொருட்கள் வெளியேறுவதற்கும் இரத்தம் உதவி செய்கிறது.

### இரத்தத்தின் முக்கிய கூறுகள்

இரத்தத்தில் 1) பிளாஸ்மா 2) சிவப்பு ரத்த அணுக்கள் 3) வெள்ளை இரத்த அணுக்கள் 4) இரத்தத்தட்டுக்கள் என்று பல கூறுகள் அடங்கியுள்ளன.

### பிளாஸ்மா (Plasma)

இரத்தத்தில் கலந்துள்ள முக்கியமான திரவம். இதில் மூன்று விதமான அணுக்கள் உள்ளன.

1) சிவப்பு இரத்த அணுக்கள் (RBC - Red Blood Cells)
2) வெள்ளை இரத்த அணுக்கள் (WBC - White Blood Cells)
3) இரத்தத்தட்டுக்கள் (Platelets).

பிளாஸ்மா உடல் திசுக்களுக்கு தேவையான சத்துக்களான புரோட்டீன், குளுக்கோஸ், என்சைம் மற்றும் ஹார்மோன்களை கொண்டு செல்ல உதவுகிறது.

சிவப்பு இரத்த அணுக்களிலுள்ள ஹீமோகுளோபின் நுரையீரலிருந்து ஆக்ஸிஜனை உடலிலுள்ள பல்வேறு பாகங்களின் திசுக்களுக்கு கொண்டு செல்கிறது. இதன் **ஆயுள் 120 நாட்கள் மட்டுமே.** சராசரியாக ஆரோக்கியமான ஆணின் ஹீமோகுளோபின் அளவு 14 முதல் 16g/dl ஆகவும் பெண்ணின் ஹீமோகுளோபின் அளவு 12 முதல் 14g/dl ஆகவும் இருக்கும்.

### இரத்தத்தட்டுக்கள்

இரத்தம் அதிகமாக வெளியேறுவதை தடுப்பதற்கும், இரத்தம் உறைவதற்கும் உதவி புரிகிறது. இதன் **ஆயுள் சுமார் ஒரு சில மணிகள் மட்டுமே.**

ஒவ்வொரு நாளும் புதிய இரத்த அணுக்கள் எலும்பு மஜ்ஜையிலிருந்து உருவாகின்றது. அதுபோன்றே பழைய இரத்த அணுக்கள் இறந்து உடலிலிருந்து வெளியேற்றப்படுகிறது.

### இரத்த வகைகள் :

இரண்டு பிரதானமான இரத்த வகைகள் உள்ளன.

1) ABO வகை : இதில் A, B, O, AB என நான்கு பிரிவுகள் உள்ளன.

2) Rh வகை : இதில் Rh Positive, Rh Negative என்று இரு பிரிவுகள் உள்ளன. (Rh என்பது Rhesus என்பதாகும்).

**அனைத்து மனிதர்களும் கீழ்காணும் நான்கு இரத்த வகைகளில் அடங்குவார்கள்.**

| | | |
|---|---|---|
| A - Positive | or | A - Negative |
| B - Positive | or | B - Negative |
| O - Positive | or | O - Negative |
| AB - Positive | or | AB - Negative |

(Positive or Negative என்பது Rh பிரிவை சார்ந்தது)

மனிதர்களில் ஒரு வகையைச் சார்ந்த இரத்தம் உள்ளவர்களுக்கு அதே வகையைச் சார்ந்த இரத்தம் அளிப்பதே சிறந்தது. மிக அத்தியாவசிய அவசர காலங்களில் மட்டுமே அதே வகையான இரத்தம் கிடைக்கவில்லையெனில் பொதுவகையாக கருதப்படும் O வகை இரத்தம் அளிக்கப்பட்டு AB வகை நோயாளி பெற்றுக்கொள்ளலாம்.

A வகை இரத்தத்தில் Anti-B வகை பொருட்கள் சார்ந்திருக்கும், அதுபோன்றே

B வகை இரத்தத்தில் Anti-A வகை பொருட்கள் சார்ந்திருக்கும், எனவே

A வகையும் B வகையும் ஒன்று சேர முடியாது.

அதுபோன்றே Rh-Negative-ம் Rh-Positive-ம் எதிர்மறை பொருட்களை கொண்டுள்ளதால் ஒன்று சேர முடியாது.

### இரத்தம் எப்பொழுது தேவைப்படுகிறது

- விபத்தில் பாதிக்கப்பட்டு இரத்தம் வெளியேறும்போது
- மருத்துவ அறுவை சிகிச்சையின்போது
- மகப்பேறுவின்போது
- கருச்சிதைவின்போது
- ஒவ்வாமை, நச்சுத்தன்மை போன்றவற்றின்போது
- தீக்காயங்களின்போது
- சிறுநீரகக் கோளாறு சிகிச்சையின்போது
- இரத்தத்திலுள்ள அணுக்கள் குறையும்போது

உயிர்காக்கும் பொருளாக இரத்தம் தேவைப்படுகிறது.

### இரத்த தானம் செய்வதால் பாதிப்பு உண்டா ?

நிச்சயமாக இல்லை. மாறாக ஒரு உயிரை (அ) பல உயிர்களை காப்பாற்றிய மகிழ்ச்சியும், மன நிறைவும் கிடைக்கிறது. 24 முதல் 48 மணி நேரத்திற்குள் தானம் அளிக்கப்பட்ட இரத்தம் [illegible] உடலில் பெருமளவில் சேர்ந்து விடுகிறது.

### தாமாக முன்வந்து இரத்த தானம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

- மாரடைப்பு வருவது குறைக்கப்படுகிறது.
- புதிய இரத்த அணுக்கள் உருவாக ஊக்கப்படுத்துகிறது.
- இரத்த தானம் வழங்குவதால் ஒருவர் உடலில் 500 கலோரிக்கும் மேலாக எரிக்கப்படுகிறது.

### இரத்த தானம் செய்த பின்னர் சிறப்பு உணவு தேவையா ?

தேவையில்லை. இரத்த தானம் செய்த உடனே அவருக்கு காபி/பால்/பழரசம் போன்றவற்றில் ஒரு கப் பருகுவதற்கும் அதனுடன், ஒரு சில பிஸ்கட்களும் சேர்த்து வழங்கப்படும். அதன் பின்னர் சாதாரண உணவை உட்கொண்டாலே போதும். சிறப்பு உணவு எதுவும் தேவைப்படாது.

### இரத்தம் சோதித்து பெறப்படுகிறதா ? பயன்படுத்தப்படுகிறதா ?

ஆமாம். அனைத்து இரத்தங்களும் HIV, Hepatitis B, Hepatitis C, Malaria and Antisyphilis ஆகிய சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு சரியாக இருந்தால் மட்டுமே பாதுகாப்பாக பயன்படுத்தப்படுகிறது.

### எத்தனை நாட்கள் வரை இரத்தத்தை பாதுகாக்க முடியும்

35 நாட்கள் வரை இரத்தம் பாதுகாக்கப்படலாம். சிறப்பு கருவிகள் மூலம் குளிர்பதப்படுத்தப்பட்ட நிலையில் 2°C முதல் 4°C வரை உள்ள நிலையில் மட்டுமே பாதுகாக்கப்படும்.

### இரத்தத்திலிருந்து மூலக்கூறுகளை பிரித்து பயன்படுத்த முடியுமா ?

ஆம். இரத்தத்தின் மூலக்கூறுகளை சிறப்பு கருவிகள் கொண்டு பிரித்து தனித்தனியாக பயன்படுத்த முடியும். இதன் மூலமாகவே ஒரு யூனிட் இரத்தம் வழங்கப்பட்டு பல உயிர்கள் காப்பாற்றப்படுகிறது.

செயற்கையாக இரத்தத்தை உருவாக்க முடியாது. அதுபோன்றே விலங்கினங்களின் இரத்தம் மனிதர்களுக்கு பயன்படுத்த முடியாது.

ஒரு சொட்டு இரத்தம் ஆனாலும் மனித நேயம் மிக்க நல்ல உள்ளம் கொண்ட, நல் இதயம் சார்ந்த ஆரோக்கியமான மனிதர்களால் மட்டுமே தானமாக

Scanned by CamScanner